| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| திருமதி.ஐ.ஜோதிசந்திரா,<br>எம்.எஸ்சி.,எம்.எட்.,எம்.பில்.,<br>முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள்,<br>முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்,<br>தருமபுரி - 636705. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி<br>அலுவலர் அவர்கள், |

ந.க.எண் : 0070 / 2023 நாள் : 04.01.2024

பொருள் : 2023-2024 - உடற்கல்வி - தருமபுரி மாவட்டம் பாரதியர் தின / குடியரசு தின புதிய விளையாட்டு போட்டிகள் - குத்துச்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் வளையப்பந்து போட்டிகள் நடத்துதல் – போட்டிகள் நடைபெறும் மையம் - தங்கும் இடம் விவரம் - சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை - 06 ந.க.எண் : 34753/எம்/4/2023, நாள் : 22.12.2023.

பார்வையின் கண்ட கடித்தின் படி 2023-2024 ஆம் கல்வியாண்டுக்கான புதிய விளையாட்டுப் போட்டிகளான குத்துச்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் வளையப்பந்து போட்டிகள் தருமபுரி மாவட்டத்தில் 10.01.2024 முதல் 13.01.2024 வரை நடைபெறவுள்ளது. மாணவர்களுக்கான போட்டிகள் 10.01.2024 முதல் 11.01.2024 வரையும் பெண்களுக்கான போட்டிகள் 12.01.2024 முதல் 13.01.2024 வரையும் இணைப்பில் காணும் மையங்களில் நடைபெறவுள்ளது என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு :

1. போட்டிகள் நடைபெறும் இடம்
2. அணி மேலாளர்கள் சார்ந்த அறிவுரைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
தருமபுரி

நகல்

1. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பலாகிறது.
2. இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம் ) சென்னை - 06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களுக்கு தகவலுக்காக
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள.

# மாநில அளவிலான பாரதியர் தின / குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் - 2023 - 2024

| | போட்டிகள் | பிரிவு | போட்டிகள் நடைபெறும் தேதி & நேரம் | போட்டிகள் நடைபெறும் இடம் | போட்டிகள் தகவல் தொடர்புக்கு | தங்கும் இடம் | தங்கும் இடம் தொடர்புக்கு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குத்துச்சண்டை (BOXING) | மாணவர்கள் | 10.01.2024 காலை 7.00 மணி | சப்தகிரி பொறியியல் கல்லூரி, பெரியாம்பட்டி | K.சாக்ரடீஸ், உ.க.ஆ, அ.மே.நி.பள்ளி, இலளிகம் 9865458334 S.சங்கர், உ.க.இ, அ.ஆ.மே.நி.பள்ளி, அரூர் 8883944356 | சப்தகிரி பொறியியல் கல்லூரி, பெரியாம்பட்டி | S.சந்திரன், உ.க.ஆ, அ.ஆ.மே.நி.பள்ளி, காரிமங்கலம். 9842168706 M.பாக்கியராஜ், உ.க.ஆ, அ.மே.நி.பள்ளி, பந்தாரஅள்ளி, 9965023564 |
| | | மாணவிகள் | 12.01.2024 காலை 7.00 மணி | | | | |
| 2 | ஜிம்னாஸ்டிக்ஸ் (GYMNASTICS) | மாணவர்கள் | 10.01.2024 காலை 7.00 மணி | மாவட்ட விளையாட்டு அரங்கம், தருமபுரி | K.சிவக்குமார், உ.க.இ. மாதிரிப் பள்ளி, தருமபுரி 9894742296 M.விஜயகுமார், உ.க.ஆ, அ.உ.நி.பள்ளி, தாசம்பட்டி 9488872110 | ( ஆண்கள் மட்டும்) அதியமான் அ.ஆ.மே.நி.பள்ளி, தருமபுரி | A.சாவெளி, உ.க.ஆ, அ.அ.ஆ.மே.நி.பள்ளி, தருமபுரி 9677863384 |
| | | | | | | ( ஆண்கள் மட்டும்) அ.மே.நி.பள்ளி இலக்கியம்பட்டி | M.தேவேந்திரன், உ.க.ஆ அ.மே.நி.பள்ளி, இலக்கியம்பட்டி, 9751431017 |
| | | மாணவிகள் | 12.01.2024 காலை 7.00 மணி | | | ( பெண்கள் மட்டும்) அவ்வையர் அரசு பெண்கள் மே.நி.பள்ளி தருமபுரி | M.அருள்செல்வி, உ.க.ஆ, அ.அ.பெ.மே.நி.பள்ளி, தருமபுரி 9942290051 |
| | | | | | | (ஆண்கள் , பெண்கள்) நகராட்சி பெண்கள் உயர் நிலைப் பள்ளி, தருமபுரி | D.S.சித்ரா, உ.க.ஆ நகராட்சி.பெ.உ.நி.பள்ளி, தருமபுரி 9994172698 |
| 3 | வளையப்பந்து (TNNIKOIT) | மாணவர்கள் | 10.01.2024 காலை 7.00 மணி | டான் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, தருமபுரி | K.இரவி, உ.க.ஆ, அ.உ.நி.பள்ளி, நார்த்தம்பட்டி, 8903288751 A.வேடியப்பன், உ.க.ஆ, அ.உ.நி.பள்ளி, சந்தப்பட்டி 9943276662 | டான் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, தருமபுரி | M.மாரியப்பன், உ.க.ஆ, R.பிரகதீஸ், உ.க.ஆ, டான் மெட்ரிக் மே.நி.பள்ளி, தருமபரி 6380262189 |
| | | மாணவிகள் | 12.01.2024 காலை 7.00 மணி | | | | |

**மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகள் 2023-2024, - தருமபுரி.**

<u>அணி மேலாளர்கள் கவனத்திற்கு</u>

1. தங்கள் மாவட்டத்திலிருந்து பங்குபெறும் மாணவர்களின் வருகையை **09.01.2024** அன்று மாலை **6.00** மணிக்கும் மற்றும் மாணவியர்களின் வருகையை **11.01.2024** அன்று மாலை **6.00** மணிக்கும் கண்டிப்பாக பதிவு செய்திட அணி மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
2. குத்துச்சண்டை போட்டியில் பங்குபெறும் மாணவர்கள் 09.01.1024 அன்று மாலை 3 மணி அளவில் Trial Weight -ம் 5 மணி முதல் 7 மணி வரை Real Weight எடுக்கப்படும்.
3. அதேபோல் மாணவிகளுக்கு 11.01.2024 அன்று மாலை 3 மணி அளவில் Trial Weight -ம் 5 மணி முதல் 7 மணிவரை Real Weight எடுக்கப்படும்.
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அனுமதி பெற்று வரும் உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர்கள் மட்டுமே அணி மேலாளராக பணியாற்ற அனுமதிக்கப்படுவர். ( அனுமதி கடிதம் கண்டிப்பாக வைத்து இருக்க வேண்டும்) பயிற்சியாளர்கள் யாரேனும் போட்டியில் இடையூறு செய்தால் போட்டியாளர் கண்டிப்பாக உடனே போட்டியிலிருந்து நீக்கம் செய்யப்படுவர்.
5. 10 - Houn's Glouse ( **குத்துச்சண்டை** ) மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
6. குத்துச்சண்டை போட்டியில் பங்குபெறும் அணி மேலாளர்கள் 2 - PassPort Size Photo எடுத்துவரவும்.
7. வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்கு தங்குமிடங்களில் தனித்தனியாக குழு ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் வைப்புத் தொகை செலுத்தவேண்டும், அத்தொகை நிறைவு நாளன்று திரும்ப வழங்கப்படும்.
8. வீரர், வீராங்கனைகள் தாங்கள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும். மேலும் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது,
9. வீரர், வீராங்கனைகள் தங்குமிடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும், அணி மேலாளர்களுக்கு மட்டுமே தங்கவும், உணவு உண்ணவும் அனுமதிக்கப்படுவர் மற்றவர்கள் வெளியில் தங்கிக் கொள்ள வேண்டும்.
10. அணி மேலாளர்கள் கூட்டம் ( மாணவர்கள் ) **09.01.2024** அன்று மாலை **6.00** மணிக்கும்.
    அணி மேலாளர்கள் கூட்டம் ( மாணவிகள் ) **11.01.2024** அன்று மாலை **6.00** மணிக்கு நடைபெறும்.
11. போட்டிகளில் பங்குபெறும் வீரர், வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள் தவிர மற்றவர்கள் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
12. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலமாக இருப்பதால் போர்வை உட்பட தங்குவதற்குரிய உடைமைகளையும் பங்கு பெறுவதற்குரிய உடைகளையும் கொண்டு வர அறிவுரை வழங்கி எடுத்து வருதல் வேண்டும். மேலும் (LOCK AND KEY) கொண்டு வருதல் வேண்டும்.
13. போட்டிகளில் பங்கு பெறுவோர் உரிய **விளையாட்டு சீருடையுடன்** இருப்பின் மட்டுமே போட்டியாளர்கள் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள்.
14. போட்டிகளுக்கான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

15. **மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் பெண் ஆசிரியைகள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.**
16. மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் ஆண் ஆசிரியர்கள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்,
17. எடைப் பிரிவு விளையாட்டு வீரர் / வீரங்கனைகள் தாங்கள் எடை போடும் போதும் மற்றும் போட்டி நடைபெறும் போதும் ஒரு Individual Photo Identity Form கையில் வைத்திருக்க வேண்டும்,
18. போட்டிகள் நடைபெறும் நாட்களில் விளையாட்டு மைதானம் மற்றும் தங்கும் இடங்களில் எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்காண் அனைத்து தகவல்களையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களுக்கும் விளையாட்டில் பங்கேற்கும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்) 04/01/2024

முதன்மைக் கல்வி அலுவலர்

தருமபுரி

(ஒப்பம்) 04/01/2024